ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2024 யூன் 26 |

**நிதியியல் உளவறிதல் பிரிவினால் 2024 சனவரி 01 தொடக்கம் 2024 ஏப்பிறல் 30 வரை நிதியியல் நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்ட நிருவாக ரீதியான தண்டப்பணங்கள்**

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 19(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்கள் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. நிதியியல் நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற்கொண்டு தண்டப்பணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2024 சனவரி 01 தொடக்கம் 2024 ஏப்பிறல் 30 வரையான காலப்பகுதியில் கீழே காட்டப்பட்டவாறு, மொத்தமாக ரூ.3 மில்லியன் கொண்ட தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணங்களாக சேகரிக்கப்பட்ட தொகைத் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டன.

**1. டிஎப்சிசி வங்கி பிஎல்சி**

**விதிப்புத் திகதி** : 2024 மாச்சு 07

**தொகை** : ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2024 மாச்சு 26

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள் ஆகியவற்றுடன் இணங்குவதற்கு தவறியமைக்காக பின்வருவனவற்றுக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது;

i. 2021ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களுக்கு 04/21ஆம் இலக்க சுற்றறிக்கையினால் வலியுறுத்தப்பட்ட 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள மூலம் பொறுப்பளிக்கப்பட்டவாறு, நிதியங்களின்/ஈட்டல்கிளன் மூலங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாடு உள்ளடங்கலாக தனிப்பட்ட ஆளொருவர் தொடர்பில் வங்கியானது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தை நடத்துவதற்கு தவறியிருந்தது. கணக்கு திறத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைவாக, கணக்கில் வைப்புச்செய்யப்பட்ட தொகையுடன் வருமான மூலங்களிலிருந்து வாடிக்கையாளரின் எதிர்பார்க்கப்பட்ட அளவுகள் முரணாகவிருந்தது என அவதானிக்கப்பட்டது.

ii. கணக்கு திறக்கப்பட்ட கிளையிலிருந்து தொலைவிலுள்ள அமைவிடத்தில், கணக்கு திறத்தல் விண்ணப்பத்தில் தரப்பட்ட நிரந்தர முகவரியைக் கொண்ட சொல்லப்பட்ட தனிப்பட்டவருக்கு கணக்கொன்றைத் திறப்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்கதும் வலுவானதுமான காரணமொன்றை வழங்குவதற்கு வங்கி தவறியிருந்தது.

iii. தனிப்பட்டவரின் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளை இனங்கண்டு, சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கையொன்றை கோவைப்படுத்துவதற்கு வங்கி தவறியிருந்தது.

## 2. சம்பத் வங்கி பிஎல்சி

**விதிப்புத் திகதி** : 2024 மாச்சு 28

**தொகை** : ரூ.2,000,000.00 (ரூபா இரண்டு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி** : 2024 ஏப்பிறல் 24

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தையும் உரிய வாடிக்கையாளர் விழிப்புக் கவன விதிகளையும் கடைப்பிடிப்பதற்கு தவறியமைக்காக பின்வருவனவற்றுக்காக நிருவாகத் தண்டப்பணம் விதிக்கப்பட்டது;

i. கணக்கு வைத்திருப்பவரை இனங்காண முடியாத கணக்குகளை வங்கி உருவாக்கி பேணியது. வாடிக்கையாளர்களின் தகவல்கள் இக்கணக்குகளுடன் இணைக்கப்படாததால், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் போன்ற அடையாளப்படுத்தல் தரவுகளைப் பயன்படுத்தி மைய வங்கித்தொழில் முறைமையில் இவ்வாடிக்கையாளர்களின் வியாபாரத் தொடர்புகளை கண்டறியமுடியவில்லை.

ii. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1373 இற்கமைவாக, 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 4(7) ஆம் ஒழுங்குவிதியின் கீழ், 2019 மே 23 அன்று திகதியிடப்பட்ட 2124/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட தனிப்பட்டவருடன் வங்கி வியாபாரத் தொடர்பை ஏற்படுத்தியிருந்தது.

iii. 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதியின் 5ஆம் ஒழுங்குவிதி மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் 2014 மே 22 ஆம் திகதியிடப்பட்ட 1863/25ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை என்பனவற்றின் பிரகாரம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தீர்மானம் 1373 இன் கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரின் நிதியங்களை, நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார வளங்களை தாமதமின்றி முடக்குவதற்கு வங்கி தவறியிருந்தது.

iv. நிதியியல் உளவறிதல் பிரிவினால் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவு/ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் - 1373/ 1 ஆம் இ.லக்க பணிப்புரையை அநுசரித்து மேலே குறிப்பிடப்பட்டவாறு பெயர்குறிக்கப்பட்ட ஆட்கள் மூலம் வைத்திருக்கப்படுகின்ற நிதியங்கள், ஏனைய நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் என்பனவற்றின் முழு விபரங்களையும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு உடனடியாக அறிப்பதற்கு வங்கி தவறியிருந்தது.